OS.No. 64/2020

Date : 01.12.2025

Witness Name & Rank – ஈஸ்வரன் - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. இந்த வழக்கில் பிரதிவாதி சிவராஜ்குமார் அவர் தாக்கல் செய்த வழக்கு அசல் வழக்கு எண். 69/2022 தாக்கல் செய்த வழக்கு பற்றியும் ஆவணங்களை பற்றியும் தெரிந்துகொண்டேனா என்றால் வழக்கு பற்றி தெரியும் ஆவணங்களை பற்றி தெரியாது. சிவராஜ் குமார் அவர்களின் தந்தை பெயர் திருமூர்த்தி என்றால் சரிதான். எனக்கு மேற்படி திருமூர்த்தியை தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு நடந்து வரும் இடமானது திருமூர்த்தி நகர் லேஅவுடில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி லே அவுட் எப்போது போடப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது நான் தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதிகளான கிருஷ்ணவேணி, ஆனந்தகுமார், ராஜேஸ்வரி, அயுப் கான், செல்வராஜ், தனகோபால் ஆகியோரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. திருமூர்த்தி நகர் லேஅவுட்டின் வழக்கு சொத்தை தவிர வேறு மனை இடம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.
2. இந்த வழக்கு சொத்தின் முன் உரிமையாளரான ஆறுமுகத்திற்கும் இந்த பிரதிவாதி சிவராஜ் குமாருக்கும் என்ன உறவு முறை என்று தெரியுமா என்றால் தெரியாது.இந்த திருமூர்த்தி நகர் லேஅவுட்டில் மேற்படி ஆறுமுகத்திற்கும் அவரது மனைவியாக கிருஷ்ணவேணிக்கும் எவ்வளவு சைட் நிலங்கள் பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நிலத்தை கிரையம் எழுதிக் கொடுத்த காளிமுத்து அவருக்கு பவர் கொடுத்த கணேசன் என்பவரிடம் எதற்காக பொது அதிகாரம் பெறப்பட்டது எவ்வளவு தொகை பேசப்பட்டது மற்றும் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது, எப்போது கொடுக்கப்பட்டது என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் 2007 ல் அயுப் கான் வழக்கு சொத்தை கிரையம் வாங்கியதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியது 2011 என்றால் சரிதான்.
3. மேற்படி எனது கிரைய அசல் பத்திரம் எங்கு உள்ளது என்றால் என்னிடம் உள்ளது, அதை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று எனது பிரமாண

வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.இந்த சொத்து தொடர்பாக என்னென்ன அசல் ஆவணங்கள் என்னிடம் உள்ளது என்றால் நான் வாங்கிய கிரைய பத்திரம் மற்றும் கணேசன் பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல் என்னிடம் உள்ளது. நான் சொன்னது போல் எந்த அசல் ஆவணங்களும் என் கைவசம் இல்லை நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல நான் உண்மையாக பணம் கொடுத்து வாங்கியிருந்தால் 2007 ல் அயுப்கான் பெயர் உள்ள சொத்தை 2011 ல் வேறு நபரிடம் கிரையம் வாங்கியிருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. நான் மோசடியாக ஆவணம் தயாரித்து நிலத்தில் அசல் உரிமையாளரிடம் பணம் பறிக்கும் நோக்கத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்த நபருக்கு முன் உரிமையாளர் முறையான ஆறுமுகத்திடம் கிரையம் வாங்கவில்லை எனவே எனது கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்து பற்றி தெரியாது முறையான ஆவணம் மூலம் நான் கிரையம் பெறாததால் அது இந்த பிரதிவாதியின் உரிமையை பாதிக்காது என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 69/2022 அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.